

# ட்யூனிக் டாப்

*இதை எப்படி தைக்கறதுன்னு கத்துக்க உங்களுக்கு ஆசையா இருந்தா, இந்த டுடோரியல் உங்களுக்கானதுதான்.*




### தேவைப்படும் பொருள்கள்

ட்யூனிக் டாப்புக்கு 45 அங்குல அகலமுள்ள 2 மீட்டர் துணி
நெக் ஃபேசிங் பயாஸ் ஸ்ட்ரிப்க்கு ¼ மீட்டர்
எங்க www.ushasew.comங்கற வலைதளத்திலிருந்து நீங்க ட்யூனிக் டாப்ஸ்க்கான டெம்ப்ளேட்டை டவுன்லோட் செய்துக்கலாம்
தண்ணில கரையக்கூடிய மார்க்கர்
கத்தரிக்கோல்
அளக்கும் டேப்
ஸ்கேல்
மாட்சிங் நூல்
மற்றும் மணிகோர்த்த பின்ஸ்






டெம்ப்ளேட்டை பேஸ் பண்ணி நாம துணிய வெட்டப்போறோம். ஷோல்டர்ச தைச்சு முன், பின் பக்க பீஸ்களை ஒன்றா ஜாயின்ட் பண்ணனும். ஒரு பயாஸ் ஸ்ட்ரிப் வெட்டி அதை நெக்லைனை ஃபினிஷ் பண்ண யூஸ் பண்ணலாம். சைட் சீம்-அ ஃபினிஷ் பண்ணி ஸ்லீவ்சயும் பாட்டமையும் ஹெம் பண்ணனும்.




### ஸ்டெப் 1 டெம்ப்ளேட் மார்க்கிங், கட்டிங்


உங்களுக்கு பிடிச்ச எந்த துணிய வேணாலும் எடுத்துக்கங்க, அதை முழுசா பிரிச்சு அதோட ரைட் சைட்-அ மேல இருக்க மாதிரி டேபிள்ல வையுங்க. டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி துணில ¼ பங்கை மடிங்க. மடிக்கும்போது பேட்டனை ஒன்றா சேர்த்து அலைன் பண்ணனுங்கறதை நினைவுல வெச்சிக்கங்க, நாங்க லைன்ஸ ஒன்றோட ஒன்று மேட்ச் பண்றோம் அப்பதான் பேட்டன் மடிஞ்சிருக்கப்பகூட பேட்டன் பாக்க சீம்லெஸா இருக்கும். www.ushasew.com ல் இருந்து டவுன்லோட் செய்யப்பட்ட ட்யூனிக் டெம்ப்ளேட்டோட முன்பக்க பீஸ அதுக்கு மேல வையுங்க. ஆன்-ஃபோல்ட் சைட்-அ சரியா வைக்கறதை உறுதி செய்துக்கங்க. மணி கோர்த்த பின்ஸ வெச்சு டெம்ப்ளேட்ட சரியான இடத்தில் பின் பண்ணுங்க. பின் பண்றப்ப துணியோட ரெண்டு அடுக்கும் நுழையறதை உறுதிசெய்துக்கங்க. செய்து முடிச்சதும், தண்ணில அழியற மார்க்கரை எடுத்துகிட்டு துணிக்கு மேல டெம்ப்ளேட்ட ட்ரேஸ் பண்ணுங்க. எல்லா பக்கங்களையும் ட்ரேஸ் பண்ணிட்டு டெம்ப்ளேட்டலேந்து பின்ஸ எடுத்துருங்க. கத்தரிகோலை எடுத்துகிட்டு முன் பீஸ கட் பண்ணிருங்க.







அந்த பீஸ தனியா எடுத்து வெச்சிட்டு மீதி துணிய மடிங்க. துணியோட லைன்ஸ மேட்ச் பண்ணிகிட்டு அந்த பேட்டன் சீம்லெ இருக்கான்னு நிச்சயம் செய்துக்கங்க. அடுத்து, துணி மேல ட்யூனிக் டெம்ப்ளேட்டோட பின் பக்க பீஸ துணி மேல வெச்சு மணி கோர்த்த பின் வெச்சு பின் பண்ணிருங்க. முன் பக்க பீசுக்கு செய்த மாதிரியே, மார்க்கர் பேனாவால துணிக்கு மேல டெம்ப்ளேட்ட வெச்சு ட்ரேஸ் பண்ணிக்கங்க. டெம்ப்ளேட்டலேந்து பின்ஸ எடுத்துட்டு, கத்தரிகோலால பீஸ கட் பண்ணிருங்க. கைய ஆட்டாம கட் பண்ணனும் ஏன்னா இதுதான் பேட்டன் நல்லா வர்றதையும் தவறா போறதையும் முடிவு செய்யுது.






**ஸ்டெப் 2 ஷோல்டர் ஜாயின்ட் செய்தல்**

இதுவரை நாம, முன், பின் பக்கம்னு ரெண்டு பீசஸ் கட் பண்ணிருக்கோம். இப்ப முன் பீஸ பிரிச்சு டேபிள் மேல ரைட் சைட் மேல இருக்க மாதிரி விரியுங்க அதுக்கு மேல பின் பக்க பீஸ வைங்க. இது ரைட் சைட், ரைட் சைட் பாத்தா மாதிரி இருக்கணும். இப்ப இதை சரியான எடத்தில வெச்சு பின் பண்ணிரலாம். ஸ்லீவ் வரை ஷோல்டர்ஸ மேட்ச் பண்ணி பாருங்க. ரெண்டு பீசஸயும் சரியான இடத்தில் மணி கோர்த்த பின்ஸ் வெச்சு பின் பண்ணிருங்க. இடது, வலது பக்க ஷோல்டர்ஸ் அப்புறம் ஸ்லீவ்ஸ பின் பண்ணுங்க. பின் செய்த துணிய உஷா ஜானோம் அல்லூர் டி.எல்.எக்ஸ் தையல் மிஷினுக்கு கொண்டு போய் ஸ்லீவோட எட்ஜ பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணிக்கங்க. ஸ்ட்ரிச் செலக்டார் டயலை ஏ-க்கும் ஸ்ட்ரிச் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணிகிட்டு தைக்க ஆரம்பிங்க. கொஞ்சம் தையல் போட்ட பிறகு தையல் பிரிஞ்சு வராம இருக்க ஒரு ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போட்டு நெக்லைன் வர்றவரை தொடர்ந்து தைச்சிட்டே. இடம் பின்களை எடுத்துட்டே போங்க. முடியற எடம் வந்ததும் மறுபடியும் ஒருசில ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போடுங்க. ஆரம்பத்திலயும் முடிவுலயும் ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போடற டெக்னிக்கை நேர் தையல் போடற ஒவ்வொரு தடவையும் ரிபீட் பண்ணனும்.





இப்ப, நூலை கட் பண்ணிட்டு இன்னொரு ஷோல்டர்லயும் அதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. இது செய்து முடிஞ்சதும் துணில நூல் நூலா தொங்கறதை சரி பண்ணவும், துணிக்கு ஒரு நேர்த்தியான ஃபினிஷிங் தரவும், ரெண்டு ஷோல்டர்லயும் ஜிக் ஜாக் தையல் போடணும். இதுக்கு, பேட்டன் செலக்டார் டயலை 'சி'க்கும் தையல் நீளத்தை 1.5க்கும் செட் பண்ணிகிட்டு தைக்கத் தொடங்குங்க. ஜிக் ஜாக் தையல் போடறப்ப ரிவர்ஸ் ஸ்ட்ரிச் தேவைப்படாது. இன்னொரு பக்கத்துக்கும் ஜிக் ஜாக் தையல ரிபீட் பண்ணுங்க.

இப்ப நாம ஷோல்டரை தைச்சு முடிச்சாச்சு.


**ஸ்டெப் 3 பயாஸ் ஸ்ட்ரிப் உருவாக்குதல், நெக்லைனை முடித்தல்**

அடுத்த ஸ்டெப் நெக்லைன் உருவாக்குதல். மெயின் துணிய தனியா வைச்சிட்டு நெக் ஃபேசிங்குக்கான வெள்ளை காட்டன் துணிய எடுங்க. டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி அதை 45 டிகிரி ஆங்கிள்ல மடிங்க. நாம 1¾ அங்குலத்தில நீண்ட ஸ்ட்ரிப்ப கட் பண்ணுவோம்.





இதை தொடங்க இந்த மடிப்பை டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி கட் பண்ணி மீதி உள்ள துணிய தனியா வையுங்க. டேப்-அ எடுத்துகிட்டு துணில 1¾ அங்குலத்துக்கு அளந்து மார்க் பண்ணிக்கங்க, இதன் முழு நீளத்துக்கும் இதே போல செய்யுங்க. இப்ப ரூலரால எல்லா பாயின்ட்ஸயும் ஒன்னா ஜாயின்ட் பண்ணுங்க மார்க் பண்ணி லைன் மேல கட் பண்ணுங்க இப்ப நெக் ஃபேசிங்குக்கான பயாஸ் ஸ்ட்ரிப் தயார்.

பயாஸ் ஸ்ட்ரிப் பாதியா மடிச்சு அது நெக்லைன் மேல தைக்கப் படறதை நீங்க பாக்கலாம். துணிய உஷா ஜானோம் அல்லூர் டி.எல்.எக்ஸ் தையல் மிஷினுக்கு கொண்டு போய் நேர் தையலுக்கு பேட்டன் செலக்டார் டயலை ஏ-க்கும், தையல் நீளத்தை 2.5க்கும் ரீ-செட் பண்ணிக்கங்க.






ஸ்ட்ரிப்ப மடிச்சிகிட்டு அதை இதுல காட்டியிருக்க மாதிரி துணியோட ரைட் சைட்ல நெக்லைன்ல வையுங்க. தைக்க தொடங்குங்க, ஆரம்பத்தில கூடுதலா கொஞ்சம் ஸ்ட்ரிப்ப விட்ருங்க. ஷோல்டர் லைன்லேந்து தொடங்கி முழுசா தைச்சிட்டே போங்க நீங்க தொடங்கின ஷோல்டர் லைனை அடையறது கொஞ்சம் முன்னால நிறுத்துங்க. கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்துங்க. ஆரம்பத்தில நாம விட்ட எக்ஸ்ட்ரா ஸ்ட்ரிப்லேந்து அரை அங்குலம் விட்டுட்டு மீதிய கட் பண்ணிருங்க, டுடோரியல்ல காட்டின மாதிரி ஸ்ட்ரிப்ப மடிச்சு அப்பறம் இன்னொரு ஸ்ட்ரிப்ப ஓவர்லாப் பண்ணி அதுக்கு மேல தையுங்க. கடைசில கொஞ்சம் ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போடுங்க. அதிகப்படியா உள்ள பயாஸ் ஸ்ட்ரிப்ப கட் பண்ணிருங்க.




இப்ப நாம நெக்லைனுக்கு நோட்சஸ் கொடுக்கணும், இது வளைவை ஃப்ளாட்டன் பண்ணி உடுத்திக்கறப்ப துணி படிஞ்சு இருக்கறதை உறுதி செய்யும். நோட்சஸ் உருவாக்கறப்ப, தையலுக்கு கொஞ்சம் மேல கட் பண்ணனும் தையல் மேல கட் பண்ணாம இருக்கறதை உறுதி செய்துக்கங்க.





இது முடிஞ்சதும், சீம் அலவன்ஸ மடிச்சு டுடோரியல்ல காட்டின மாதிரி ஒரு ரவுன்ட் ஆஃப் டாப் தையல் போடணும். நேர்த்தியான ஃபினிஷிங்க உறுதி செய்ய, துணிய பிரஸ்ஸர் ஃபூட்ல வைச்சு மெதுவா, சீரான டாப் ஸ்ட்ரிச் போடுங்க. அதுக்கு அப்றம் கூடுதல் நூலை கட் பண்ணிருங்க.






அடுத்து, பயாஸ் ஃபேசிங்கை ரிவர்ஸ் சைட்-ல மடிச்சு ஃபேசிங்கோட உள் மடிப்போட தையுங்க. பிரஸ்ஸர் ஃபூட் எட்ஜ்ல அதை அலைன் பண்ணி நெக்லைன் முழுக்க தையுங்க. கூடுதல் நூலை கட் பண்ணிருங்க, இந்த பகுதி முடிஞ்சுது.






### ஸ்டெப் 4 சைட் சீம்ஸ் முடித்தல், ஸ்லீவ் மற்றும் அடிப்பகுதி ஹெம்மிங்



நெக்லைனுக்கு அப்புறம் நாம சைட் சீம்ஸ் வேலைய பாக்கணும். ஸ்லீவ்ஸ ஒன்றா மேட்ச் பண்ணி பக்கங்களை மணிகோர்த்த பின்ஸ் வெச்சு பின் பண்ணனும். இன்னொரு பக்கத்துக்கும் அதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. சைட் சீம்ஸ் தைச்சு முடிச்சதும், நாம ஸ்லீவ்ஸ ஹெம்மிங் பண்ணனும்.


அன்டர் ஆர்ம்லேந்து சைட் சீம்ஸ் தைக்க ஆரம்பிக்கலாம்.















பிரஸ்ஸர் ஃபூட் எட்ஜ்ல ஸ்லீவ அலைன் பண்ணி தைக்கத் தொடங்குங்க. தைச்சிட்டே போகறப்ப பின்கள எடுத்துருங்க. வளைவு கிட்ட வரும்போது மெதுவா தையுங்க, கவனமா இருங்க. முடியற எடத்துக்கும் வர்றப்ப ஒரு சில ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போட்டு இன்னொரு பக்கத்துக்கு போயிருங்க. இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. இது முடிஞ்சதும், சைட் சீம்ஸ்ல விளிம்புகள் பிரிஞ்சு வராம இருக்க நாம ஒரு ரவுன்ட் ஜிக் ஜாக் தையல் போடுவோம். முதல்ல செய்த மாதிரியே பேட்டன் செலக்டார் டயலை 'சி'க்கும் தையல் நீளத்தை 1.5க்கும் செட் பண்ணிகிட்டு தைக்கத் தொடங்குங்க. இந்த பிராசஸ் திரும்பத் திரும்ப ரிபீட் ஆகற மாதிரி இருக்கலாம் ஆனா, இது ஒரு முக்கிய ஸ்டெப், இதை மிஸ் பண்ணிராதீங்க. ரெண்டு பக்கங்களையும்  ஜிக் ஜாக் தையல போட்டு ரெண்டு அன்டர் ஆர்ம்ஸ்லயும் நோட்சஸ் உருவாக்குங்க.

அதுக்கு அப்புறம் ஸ்லீவ்களை ஹெம் பண்ண, ஸ்லீவ்ஸ ஒரு அரை அங்குலம் மடிங்க, அதை க்ரீஸ் பண்ணிட்டு மறுபடியும் அரை அங்குலம் மடிங்க. சர்குலர் சீம்ஸ் தைக்க சுலபமா இருக்க, மிஷினோட ஆக்சஸரி பாக்ஸ நீக்கிருங்க. ஸ்லீவோட எட்ஜ பிரஸ்ஸர் ஃபூட்டோட அலைன் பண்ணுங்க. அப்புறம் அதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க, நேர் தையலுக்கு பேட்டன் செலக்டார் டயலை ஏ-க்கும், தையல் நீளத்தை 2.5க்கும் ரீ-செட் பண்ணிக்க மறக்காதீங்க. ஸ்லீவ் முழுவதும் தொடர்ந்து தையுங்க. அதிகமான நூலை கட் பண்ணிருங்க, இன்னொரு ஸ்லீவுக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க.

ஸ்லீவ்ஸ தைச்சு முடிஞ்சதும், பாட்டம் ஹெம்லைனுக்கு போகலாம். ஆக்சஸரி பாக்ஸ மறுபடியும் அட்டாச் பண்ணுங்க. ஸ்லீவ் மாதிரியே அடிப்பகுதியையும் அரை அங்குலம் மடிச்சு, க்ரீஸ் பண்ணிகிட்டு மறுபடியும் அரை இஞ்ச் மடிச்சு அதுக்கு மேல தையுங்க. மடிச்சிட்டே அது முழுவதும் தொடர்ந்து தையுங்க, அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க அவ்ளோதான் முடிஞ்சுது.

இதுவரை, நாம சைட் சீம்ஸ். பாட்டம் ஹெம்லைன் அப்புறம் ஸ்லீவ்ஸ் ஹெம்லைன் முடிச்சிட்டோம்.

நம்ம ட்யூனிக் டாப் இப்ப தயார். இதை சினிமா டேட்ஸ் முதல் பிக்னிக் அப்புறம்  காஷுவலா வெளிய போகறதுன்னு ஏராளமான விஷயங்களுக்கு இதை உடுத்திக்கலாம்.